**உசிலம்பட்டி நகராட்சி மன்றம்**
**நகர்மன்ற அவசரக்கூட்டம்**
**நாள். 30.05.2023 செவ்வாய்க்கிழமை நேரம் – காலை 11.30 மணி**

**மன்றப்பொருள்–1**

2022–2023 ஆம் ஆண்டிற்கான பொதுநிதியின்கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளை ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் மூலம் செயல்படுத்த சேவை வழங்குநர் / முகவரி / ஒப்பந்ததாரர் மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர் தேர்வு செய்யும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | 2022–2023 ஆம் ஆண்டிற்கான பொதுநிதியின்கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் மூலம் செயல்படுத்த சேவை வழங்குநர் / முகவர் / ஒப்பந்ததாரர் மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர் தேர்வு செய்யும் பணி | ரூ. 204.14 | M/s. ராமன் அன் கோ | 0.44% குறைவு |
| | | | M/s. எக்ஸல் நீட் அன்ட் டெடி ஏஜென்ஸி | மதிப்பீட்டு விலை |

**அலுவலகக்குறிப்பு**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்
(ந.க.எண். 2255/2022/இ1)

**தீர்மானம் எண்.438**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**மன்றப்பொருள்–2**

உசிலம்பட்டி நகராட்சி பகுதிகள் அமைந்துள்ள 3 எண்ணிக்கையிலான குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளில் இருந்து 3 மண்டலங்களாக (Zone) பிரிக்கப்பட்டு சுமார் 112 எண்ணிக்கையுள்ள குடிநீர் வால்வுகள் மூலம் காலை மற்றும் மாலை வேலைகளில் தினசரி இந்நகருக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

குடிநீர் வால்வினை திறந்து மூடுவதற்கு நிரந்தர பணியாளர் யாரும் இல்லாத காரணத்தினால் குடிநீர் வழங்குவது முற்றிலும் சிரமமாக உள்ளது. மேலும், மேற்காணும் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளை சீரான கால இடைவெளியில் சுத்தம் செய்வதற்கும், நீரேற்றம் செய்வதற்கும், குடிநீர் மேல்நிலைத்தொட்டியின் பாதுகாப்பிற்கும் போதிய பணியாளர்கள் இல்லை. இதே போன்று தலைமை நீரேற்று நிலையத்தில் மின்

மோட்டார்களை இயக்குவதற்கு மற்றும் தெருவிளக்கு பராமரிப்புக்கான மின் பணியாளர்கள் பணியிடம் காலியாக உள்ளது.

எனவே, மேற்காணும் குடிநீர் வால்வு திறந்து மூடுவதற்கும், குடிநீர் மேல்நிலைத்தொட்டி சுத்தம் செய்வது மற்றும் பாதுகாத்தல், எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலைய மின் மோட்டார் இயக்குதல் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு ஆகிய பணிகளுக்கு கீழ்க்கண்டவாறு பணியாளர்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டியுள்ளது.

1). குடிநீர் மேல்நிலைத்தொட்டி

சுத்தம் செய்தல், காவலர் பணி மற்றும் மின் பணியாளர் – 21 எண்ணிக்கை

மேற்கண்டவாறு 01.06.2023 முதல் 31.11.2023 வரை ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்தி ஒப்பந்ததாரர் மூலம் பணியினை ரூ. 20.00 இலட்ச மதிப்பீட்டில் குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2621/2022/இ1)

**தீர்மானம் எண்.439**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–3</u>

உசிலம்பட்டி நகராட்சி வார்டு–23, கவண்டன்பட்டி பகுதியில் உள்ள பெண்கள் கழிப்பறையில் பழுது ஏற்பட்டுள்ள காரணத்தால் அப்பகுதி பெண்கள் கழிப்பறை வசதி இல்லாமல் சிரமப்பட்டு வருகின்றனர். எனவே, அப்பகுதி பெண்களுக்கு கழிப்பறையை மராமரத்து செய்யும் பணியினை ரூ. 5.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). நகராட்சி பொது நிதி இருப்பினை கருத்தில் கொண்டு பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 956/2023/இ1)

**தீர்மானம் எண்.440**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

நகர்மன்ற தலைவர்
உசிலம்பட்டி நகராட்சி.